

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும்,கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் பேசினார். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆறு.செல்வராசன், வே.தமிழ்மாறன், கா.வெங்கட ராமன், செயற்குழு உறுப்பினர்அ. முகமது ஆகியோர் உள்ளார்கள் .

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் சிறப்புரை!

நெல்லை, செப். 3 -

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் களக்காடு நகரம்,களக்காடு வடக்கு ஒன்றியம், களக்காடு தெற்கு ஒன்றியம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.

அதன்படி களக்காடு நகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் அருணா திருமண மண்டபத்தில் அவை தலைவர் ராமலிங்கம் தலைமையில் மாவட்ட பிரதிநிதிகள் பீட்டர்,உசேன், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நகர செயலாளர் மணி சூரியன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.

நிகழ்வில் மாநில துணை அமைப்பாளர்கள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், களக்காடு வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வகருணாநிதி,களக்காடு நகர்மன்றத் தலைவர் சாந்தி சுபாஷ், துணை செயலாளர்கள் சுபாஷ் சந்திர போஸ்,முருகப்பெருமாள்,சங்கரி முருகன்,பொருளாளர் பெருமாள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஜான் ரபீந்தர்,செல்வ சூடாமணி, பிரேம் ஆனந்த், தொழிலாளர் அணி தலைவர் இசக்கி பாண்டி,துணைத் தலைவர் சுப்பையா,விவசாய அணி துணை அமைப்பாளர் கருப்பசாமி பாண்டியன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜின்னா, சேவியர் சார்ஜ்,கௌரி செந்தில், முகைதீன், அருணாசலம், ஏசு தாசன், சர்தார் அலி கான், நகர் மன்ற உறுப்பினர்கள் பிரேமா,ராமச்ச ந்திரன், ராஜன், ஜெகநாதன், சித்ரா,தாமரைச் செல்வி, வார்டு செயலாளர்கள் மதியழகன் சௌந்தரபாண்டி, துரை பிள்ளை, அழகு சேகர்,குலசேகரன், ராமச்சந்திரன்,மாடசாமி,ஜெயராமன், வெங்கடேசன், ஆசைத்தம்பி,முருகன், அண்ணாதுரை,ஜாகிர் உசேன்,அழகிரி ராஜன்,தர்மராஜ், மீரான்மைதீன்,ஜமால் மைதீன்,மாடசாமி,முத்து செல்வன், முத்துராமலிங்கம்,பாகமுகவர்கள் விக்ரமன், கிருஷ்ணன்,ராபின், பரமசிவன்,முருகன்,பிரபாகரன்,ரிகாஷ், மணிகண்டன், அருள்பிரசாத்,ஜேம்ஸ் ராஜா,ஜெயக்குமார்,வேல் முருகன், யூசுப் தௌபிக், ஜெயலானி,முத்தையா, வேல்முருகன்,நகர இளைஞரணி சுரேஷ் ரவி,நிர்வாகிகள் சுந்தர்ராஜன்,சுபாஷ், நெப்போலியன்,இளங்கோவன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து களக்காடு வடக்கு ஒன்றிய தி.மு.க.சார்பில் ஒன்றிய செயலாளர் செல்வ கருணாநிதி தலைமையில் ஒன்றிய அவைத்தலைவர் யாக்கோபு,ஒன்றிய பொருளாளர் தங்கதுரை,துணைச் செயலாளர்கள் கருப்பசாமி பாண்டியன், அருள் ஜோதி,சாந்தி கருப்பசாமி, மாவட்ட பிரதிநிதிகள், ஐயப்பன்,கிருஷ்ணன், மாடசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.

நிகழ்வில் கிளைக்கழக செயலாளர்கள் ராமசாமி,கணபதி வேலன்,சங்கரன், லட்சுமணப் பெருமாள், லட்சுமணன், சங்கரன், பண்டாரம், ராஜன் துரை, ஏசு பாதம், செல்வகுமார்,சவுந்தரபாண்டி, கருப்பசாமி, செல்லையா, கண்ணன், சரவணன், முருகன், பேச்சசி, பாஸ்கர்,ரவி, தாமஸ், ஏஜோஜ்,நயினார், அன்னபாண்டி, முத்துச் செல்வன், அருள்தாஸ், அய்யாக்குட்டி,வெள்ளத்துரை, ஆறு முகம், பெருமாள்,முத்துக்குமார்,முருகன், அருணாசலம், வேல் தேவர், ஜெயக்குமார், ரவி, முருகேஷ்,சுந்தர்,கணேஷ், முத்துசாமி,பேச்சிமுத்து, சுப்பையா, மாசாணம், நம்பி, செல்லத்துரை, பாண்டி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் களக்காடு தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றிய செயலாளர் பி.சி.ராஜன் தலைமையில் ஒன்றிய அவைத்தலைவர் தங்கபாண்டியன் துணைச் செயலாளர் செல்வம்,ஒன்றிய பொருளாளர் திருமலை நம்பி,மாவட்ட பிரதி ஜான்பால் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.ஒன்றிய துணை செயலாளர் கருணாகரன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் மைக்கேல்,மாநில அணி துணை அமைப்பாளர்கள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல்,வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வ கருணாநிதி,நகர செயலாளர் மணி சூரியன், மாவட்ட அணி துணை அமைப்பாளர் வைத்தியலிங்கம்,பொன் செல்வன்,அந்தோணி,சுப்பிரமணியன்,

ஒன்றியக் கழக அணி அமைப்பாளர்கள் கல்யாணசுந்தரம், முருகேசன், செல்வின், ஜெயக்குமார், கொம்பையா, முருகன், கல்யாணி கார்த்திக், முகிலன், கிளைச் செயலாளர்கள் ஸ்டாலின் மணி, சுடலை, டெய்சி பியூலா, ராஜன்,கலைச்செல்வன் ஜேக்கப், இன்பலிங்கம், பொன்ராஜ், மகாராஜன்,சொரிமுத்து,ஆமோஸ் ஜெபதுரை, மின்சன், ராமர், ஏசுதாஸ், சிவக்குமார், கிரிபால், முத்துக்குமார், சுரேஷ் கண்ணன், பாஸ்கர்,சார்ஜ், பால்ராஜ்,பொன்ராஜ்,ஆறுமுகம், சாமுவேல்ராஜ், ராபின்சன், பொன் செல்வன், முருகன், பாலு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் நகர தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஸ்ரீ கணபதி மினி மகாலில் நகர அவை தலைவர் முப்புடாதி தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் பிரகாஷ் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.பங்கேற்று உரையாற்றினார். உடன் ராணிஸ்ரீ குமார் எம்.பி. சண்முகசுந்தரம், முத்துச்செல்வி, செண்பகவிநாயகம், பரமகுரு, உமா மகேஸ்வரி, அன்புமணி கணேசன், முத்துக்குமார், சுப்புத்தாய், டைட்டஸ் ஆதித்தன், மாரிசாமி, மகேஸ்வரி, மனோகரன், ராஜதுரை உள்பட கழகத்தினர் உள்ளனர்.

### கள்ளக் குறிச்சி வடக்கு மாவட்டத்தில்

# கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் அறிவிப்பு!

| ஒன்றியம் /நகரம்/ பேரூர் | செயலாளர்கள் | தேதி | இடம் |
|---|---|---|---|
| திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றியம் | ம.சந்திரசேகரன் | 3-9-2024 காலை 10.00 மணி | கீர்த்தி மண்டபம் - அரசூர் |
| சங்கராபுரம் தெற்கு ஒன்றியம் | ந.ஆறுமுகம் | 3-9-2024 மதியம் 3.00 மணி | NSK மண்டபம், மேலேரி |
| திருநாவலூர் மேற்கு ஒன்றியம் | வெ.முருகன் | 4-9-2024 காலை 9.30 மணி | பூங்குழலி மண்டபம் களமருதூர் |
| திருநாவலூர் கிழக்கு ஒன்றியம் | ஜி.ஆர்.வசந்தவேலு | 4-9-2024 காலை 11.00 மணி | வசந்தம் மஹால் – கெடிலம் |
| கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றியம் | எஸ்.பி. அரவிந்தன் | 4-9-2024 மதியம் 3.00 மணி | சுபம் மஹால் – வன்னஞ்சூர் |
| வடக்கனந்தல் பேரூர் | C.ஜெயவேல் | 4-9-2024 மாலை 4.30 மணி | VSA மண்டபம் – வடக்கனந்தல் |
| சின்னசேலம் பேரூர் | M.செந்தில்குமார் | 5-9-2024 மதியம் 3.00 மணி | அகமுடையர் மண்டபம் - சின்னசேலம் |
| உளுந்தூர்பேட்டை மேற்கு ஒன்றியம் | ப.இராஜவேல் | 7-9-2024 காலை 10.00 மணி | BSK திருமண மண்டபம் எலவனாசூர்கோட்டை |
| சங்கராபுரம் பேரூர் | தா.துரைதாகப்பிள்ளை | 8-9-2024 மாலை 4.00 மணி | தாகப்பிள்ளை திருமண மண்டபம் - சங்கராபுரம் |
| உளுந்தூர்பேட்டை கிழக்கு ஒன்றியம் | சிவ. வைத்தியநாதன் | 9-9-2024 காலை 10.00 மணி | லலிதா சக்கரவர்த்தி மண்டபம்- உளுந்தூர்பேட்டை |
| உளுந்தூர்பேட்டை நகரம் | த.டேனியல்ராஜ் | 9-9-2024 மதியம் 12.00 மணி | லலிதா சக்கரவர்த்தி மண்டபம்- உளுந்தூர்பேட்டை |
| சின்னசேலம் வடக்கு ஒன்றியம் | வி.வி. அன்புமணிமாறன் | 9-9-2024 மதியம் 2.00 மணி | கொங்கு மண்டபம் - சின்னசேலம் |
| கல்வராயன்மலை வடக்கு ஒன்றியம் | சு. கிருஷ்ணன் | 10-9-2024 காலை 9.00 மணி | வெங்கோடு ஊராட்சி |
| கல்வராயன்மலை தெற்கு ஒன்றியம் | ல.சின்னதம்பி | 10-9-2024 மதியம் 12.00 மணி | கரியாலூர் ஊராட்சி |

மேற்காணும் விபரப்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தா.உதயசூரியன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் புளியடிதம்பத்தில் மறைவெய்திய காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் வே.ஆரோக்கியசாமியின் தந்தை வேத முத்து உடையார் உடலுக்கு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன் உள்ளார்.

### முதலீட்டாளர்கள் மாநாடுகளை அவ்வப்போது நடத்தி வருகிறார் முதல்வர்!

# தமிழ்நாட்டை நோக்கி வரும் முன்னணி தொழில் முதலீட்டாளர்கள்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பெருமிதம்!

சென்னை, செப். 3 -

தமிழ்நாட்டில் அனைத்து வசதிகளும் இருப்பதால், சர்வ தேச அளவில் இருந்தும் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் முன்னணி தொழில முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். அவர்களின் வருகையை எதிர்நோக்கி அவ்வப்போது முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து 2.9.2024 தேதிய ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:L

தமிழ்நாடு எல்லா துறைகளிலும் வளர்ச்சி பெற்றுவருகிறது என்றால் அதற்கு அடிப்படை, தொழில் வளர்ச்சிதான். முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், “2030க்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர், அதாவது ரூ.83 லட்சம் கோடி பொருளாதார நாடாக மாற்றுவேன்” என்று பிரகடனப்படுத்தி, அந்த இலக்கை நோக்கி அரசை வேகமாக அழைத்து செல்கிறார். தொழில் வளர்ச்சி என்பது சும்மா வந்துவிடாது. அதற்கான சாதகமான சூழ்நிலை முதலில் அந்த மாநிலத்தில்

இருக்கவேண்டும். அதைப் பார்த்துத்தான், தொழில் முதலீட்டாளர்கள் ஆர்வத்துடன் வருவார்கள்.

தற்போது, எல்லா மாநிலங்



தலையங்கம்
தினத்தந்தி
2.9.2024
தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஆர்வம்!

களும் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றன. ஆனால், தொழில் முதலீட்டாளர்களோ அழைத்தவுடன் அப்படியே சென்றுவிடுவதில்லை. “சட்டம்ஒழுங்கு நிலை என்ன? மின்சாரம் தங்கு தடையில்லாமல் கிடைக்கிறதா? சாலை, போக்குவரத்து வசதிகள் எப்படி? என்பதை அலசி ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள்.

அவர்கள் எதிர்பார்க்கும் வசதிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் இருப்பதால், இப்போது சர்வதேச அளவில் இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் முன்னணி தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். தமிழக அரசும் அவர்களின் வருகையை எதிர்நோக்கி அவ்வப்போது முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் சென்னையில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலமாக 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

கையெழுத்திடப்பட்டு ரூ.6.64 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் செயல் வடிவம் பெற்றால் 14 லட்சம் பேருக்கு நேரடியாகவும், 12 லட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இதன் தொடர்ச்சியாக, சென்னையில் சில நாட்களுக்கு முன்பு நடந்த

தமிழ்நாடு, முதலீட்டா ளர்கள் மாநாட்டின் போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.17,616 கோடி முதலீட்டில் 64,968 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் 19 தொழிற்சாலைகளை தொடங்கி வைத்துள்ளார். இது மட்டுமல்லாமல், ரூ.51,157 கோடி முதலீட்டில் 41,835 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 28 தொழில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். மாநாட்டில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசும்போது, “கடந்த 3 ஆண்டுகால ஆட்சியில் 31 லட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் ரூ.9 லட்சத்து 74 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்த்து இருக்கிறோம்” என்று பெருமைபட கூறினார்.

இந்த தொழிற்சாலைகளில் எல்லாம் பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு கிடைக்கிறது. பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை தமிழ்நாட்டில் நிலவுவதால் இப்போது பல தொழிற்சாலைகளில் பெண்கள் மட்டுமே அதிக எண்ணிக்கையில் வேலை செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் தைவான் நாட்டை சேர்ந்த பிரபல நிறுவனமான பாக்ஸ்கான், ஆப்பிள் ஐபோன்களை தயாரித்து வருகிறது. இதில் பணியாற்றும் 41 ஆயிரம் பேரில் 35 ஆயிரம் பேர் பெண்கள்தான். ‘ஆணுக்கு பெண் சமம்’ என்ற நிலைமாறி, ‘பெண்ணுக்கு நிகர் ஏது? என்றநிலை உருவாகிவிட்டது.

இப்போது, தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 7 தொழில் நிறுவனங்கள் ரூ.1,300 கோடி மதிப்பில் தொழில் தொடங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் மூலம் 4,600 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இது போன்று, ஆர்வத்துடன் தமிழகத்தில் தொழில் தொடங்க வரும் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனுமதிகளை விரைவாக வழங்கவேண்டும். இப்போது தொழில் வளர்ச்சியில் முன்னிலை வகிக்கும் தமிழ்நாடு விரைவில் முதலிடம் பெறவேண்டும். அதற்கான தூரமும் வெகு தொலைவில் இல்லை.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

# நெல்லை மாநகர கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்



**நெல்லை மாநகர தி.மு.க. செயலாளர்**
**சு.சுப்பிரமணியன் அறிவிப்பு**

மாண்புமிகு **முதலமைச்சர் கழகத்தலைவர் தளபதியார்** அவர்களின்
ஆணைக்கிணங்க, மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர்
**மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின்** அவர்களின்
வழிகாட்டுதலின்படி, மாண்மிகு நிதி & மனிதவள மேம்பாட்டுத்துறை மற்றும்
திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சர்
மாண்புமிகு **தங்கம் தென்னரசு** அவர்களின் அறிவுறுத்தலின்படி,

**03.09.2024 செவ்வாய்க்கிழமை, மாலை 5.00 மணிக்கு**
**ஜி.வி. மஹால் - தச்சநல்லூர், வைத்து நெல்லை மாநகர திமுக சார்பில்**

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் திரு. **டி.பி.எம்.மைதீன்கான்**
அவர்களின் தலைமையில் தச்சநல்லூர் பகுதிச்செயலாளர் திரு. **பூ.சுப்பிரமணியன்,**
பாளையங்கோட்டை பகுதிச் செயலாளர் திரு. **அன்டன் ஆ.செல்லத்துரை**
மேலப்பாளையம் பகுதிச் செயலாளர் திரு. **செ.சாகுல் ஹமீது**
நெல்லை பேட்டை பகுதிச் செயலாளர் திரு. **இரா.நமச்சிவாயம் (எ) கோபி**
மாநகர துணைச் செயலாளர்கள் திரு.**வி.எஸ்.அப்துல் கையூம்,**
திரு. **பாலமுருகன் (எ) பிரபு,** திருமதி. **சுதா மூர்த்தி,** மாநகர பொருளாளர்
திரு. **அண்ணாதுரை** ஆகியோர் முன்னிலையில், மாநகர கழகத்தின்
**பொது உறுப்பினர்கள் கூட்டம்** நடைபெறவுள்ளது.

ஆகவே மாநகரக்கழக நிர்வாகிகள் பகுதிக்கழக நிர்வாகிகள்,
வட்டக்கழகச் செயலாளர்கள், வட்டக்கழக நிர்வாகிகள்
கழக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள்
அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.
தச்சநல்லூர் பகுதி துணைச் செயலாளர் திரு. **ஸ்டார் முருகன்**
நன்றியுரை கூறுகிறார்.

**சு.சுப்பிரமணியன் B.E., MBA., LLB.,**
**செயலாளர் - நெல்லை மாநகர திமுக**